بسم الله الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 4

இதழ் 19

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

03 ரமஜான் 1440 ஹிஜ்ரி கமரி 09 ஹிஜ்ரத் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி

09 மே 2019


## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ الَّذِيۡنَ يَشۡتَرُوۡنَ بِعَهۡدِ اللّٰهِ وَاَيۡمَانِهِمۡ ثَمَنًا قَلِيۡلًا اُولٰۤٮِٕكَ لَا خَلَاقَ لَهُمۡ فِى الۡاٰخِرَةِ وَلَا يُكَلِّمُهُمُ اللّٰهُ وَلَا يَنۡظُرُ اِلَيۡهِمۡ يَوۡمَ الۡقِيٰمَةِ وَلَا يُزَكِّيۡهِمۡ وَلَهُمۡ عَذَابٌ اَلِيۡمٌ ۝٧٨

அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதிக்கும், தங்கள் சத்தியங்களுக்கும் ஈடாக அற்பமான கிரயத்தைப் பெற்றுக் கொள்கின்றவர்களுக்கு மறுமையில் எந்தப் பங்கும் இல்லை. மறுமை நாளில் அல்லாஹ் அவர்களுடன் பேசவுமாட்டான். அவர்களைப் பார்க்கவும் மாட்டான். அவர்களைத் தூய்மையாக்கவும் மாட்டான். அவர்களுக்கு வேதனையளிக்கக் கூடிய தண்டனையும் (விதிக்கப்பட்டு) உள்ளது. (3:78)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## 124 -வது காதியான் ஆண்டு மாநாடு 2018 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இது 127 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 124 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் தகுதியை வேறு எவராலும் அடைய முடியாது. அன்னாரது ஒவ்வொரு சொல்லும் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பில் தம்மை மாய்த்ததற்கான ஆதாரமாகும்**

**இந்தக் கடைசி நாளையும் ஸலவாத்தைக் கொண்டு நிரப்புங்கள். மேலும் புதிய ஆண்டையும் ஸலவாத்தைக் கொண்டு ஆரம்பம் செய்யுங்கள். இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இருப்போடு தொடர்புடைய அந்த அருட்களை விரைவாக நாம் பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும்**

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெற்றவர்களின் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

இறைவழியில் அழைக்கும் பணியை நிறைவேற்றக் கூடியவர்களுக்கு நற்செய்தி வழங்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான களம் காலியாகவே உள்ளது என்ற நற்செய்தியை நான் உங்களுக்கு தெரிவிக்கின்றேன். ஒவ்வொரு சமுதாயமும் உலகத்தை நேசித்துக் கொண்டிருக்கிறது. இறைவன் திருப்தியடையும் விஷயங்களின் பக்கம் உலகிலுள்ளவர்களுக்குக் கவனமில்லை. எந்த மக்கள் முழுமையான வேகத்துடன் இந்த வாசலில் நுழைய விரும்புகின்றார்களோ அவர்கள் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தி இறைவனிடமிருந்து சிறப்பான அருட்கொடையை பெற்றுக் கொள்ளவதற்குரிய சந்தர்ப்பம் இதுதான்.

அன்னார் கூறினார்கள்: உங்களை இறைவன் வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருதவேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவனின் கரத்தினால் மண்ணில் விதைக்கப்பட்ட விதையாவீர்கள். இந்த விதை முளைக்கும்; பூக்கும்; எல்லாத் திசையிலும் இதன் கிளைகள் படரும். பின்னர் வலுவானதொரு மரமாகிவிடும் என்று இறைவன் கூறியுள்ளான். எனவே இறைவனின் வசனத்தில் நம்பிக்கை கொண்டு இடையில் ஏற்படும் சோதனைகளுக்கு அஞ்சாதவர்கள் அருளுக்குரியவர்கள் ஆவர். ஏனென்றால் சோதனைகள் வருவதும் அவசியமானதாகும். தமது பைஅத் வாதத்தில் உண்மையாளர் யார்? பொய்யர் யார்? என உங்களைச் சோதிக்கவே இறைவன் அவ்வாறு செய்கிறான். (அல் வஸிய்யத், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 308)

சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் நமக்கு இறையழைப்பின் பக்கம் கவனமூட்டியவாறு நமக்காக ஓர் இலக்கை நிர்ணயித்தவாறு கூறுகிறார்கள்:

உலகின் ஒவ்வொரு அஹ்மதியும் ஆண்டுக்குக் குறைந்தது ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் வரை இந்தப் பணிக்காக வக்ஃப் செய்ய வேண்டும். முழுமையான அர்ப்பணிப்புடன் அனைத்து ஆற்றல்களையும் ஒன்று திரட்டி ஒவ்வொருவரும் தம்மை முன்வைக்க வேண்டும். அவர் ஹாலண்டின் அஹ்மதியாக இருந்தாலும் சரி; ஜெர்மனியைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி; பெல்ஜியத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி அல்லது ஃபிரான்ஸைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி அல்லது ஐரோப்பாவின் எந்த நாட்டைச் சார்ந்தவராகவோ அல்லது உலகின் எந்தவொரு நாட்டைச் சார்ந்தவராகவோ இருந்தாலும் சரி, கானாவையோ, ஆப்ரிக்காவின் புர்கினோஃபாஸோவையோ, கனடா அல்லது அமெரிக்கா அல்லது ஆசியாவின் எந்தவொரு நாட்டைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி ஒவ்வொருவரும் இப்போது இவ்விஷயத்தில் அர்ப்பணிப்பைக் காட்ட வேண்டும்.

உலகை அழிவிலிருந்து காக்க வேண்டும் என்றால் ஆர்வத்துடனும் உத்வேகத்துடனும் இந்த தூதுச் செய்தியை எட்ட வையுங்கள். சொந்த நாட்டினருக்கும் நமது இத்தூதுச் செய்தியை எட்ட வையுங்கள். நான் கூறியதைப் போன்று உலகை அழிவிலிருந்து காப்பாற்றுங்கள். ஏனென்றால் இப்போது அல்லாஹ்வின் பக்கம் குனிவதைத்தவிர எந்தச் சமுதாயமும் பாதுகாப்பாக இருக்காது. எனவே இப்போது அவர்களைக் காப்பாற்ற இறைவன் பக்கம் அழைக்கக் கூடியவர்களின் குறிப்பிட்ட எண்ணிக்கையைக் கொண்ட அல்லது குறிப்பிட்ட இலக்கை அடையும் நேரமில்லை. மாறாக, ஒவ்வொருவரும், ஒவ்வொரு அஹ்மதியும் இத்தூதை எட்ட வைப்பதில் தீவிரம் காட்டும் வகையில் ஜமாஅத்துகள் திட்டம் வகுக்க வேண்டும் (ஜுமுஆ பேருரை 4 ஜூன் 2004)

*(தொடர்ச்சி 10 வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் மீதும் அளப்பற்ற அன்பு கொண்டிருந்து அவனது திருப்தியைப் பெறுவதற்காக முயன்ற அந்த மக்களின் மீது அல்லாஹ் ஆயிரக்கணக்கான அருட்களைப் பொழிவானாக.**

**நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமையாக வந்த ஷரீஅத் இல்லாத நபி என்று ஏற்றுக் கொள்கின்றோம். மேலும் இதனால் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தஸ்தின் மீது எவ்விதக் குறைவும் ஏற்படுவதில்லை. மாறாக, அன்னாரது அந்தஸ்து உயர்கின்றது. அதாவது இனிமேல் நபித்துவமும் பெருமானார் (ஸல்) அவர்களின் அடிமையாக இருப்பதனால் தான் கிடைக்கும்**

**அல்லாஹ்வே! நீ எனது பார்வையை எடுத்துக் கொள்வாயாக. எதுவரை என்றால் நான் எனது அன்பிற்குரிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்குப் பிறகு எவரையும் பார்க்கக் கூடியவனாக இருக்கக் கூடாது**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களான ஹஸ்ரத் கிராஸ் பின் அஸிம்மா (ரலி), ஹஸ்ரத் உபைதா பின் தய்யிஹான் (ரலி), ஹஸ்ரத் அபூ ஹன்னா மாலிக் பின் அம்ர் (ரலி), ஹஸ்ரத் அப்தில்லாஹ் பின் ஸைது ஸஃலபா (ரலி) மற்றும் ஹஸ்ரத் மஆஸ் பின் அம்ர் பின் ஜமூஃ (ரலி) ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

**கிலாஃபத்தின் மீது அளப்பற்ற அன்பு கொண்டிருந்த, தைரியமிக்க, மக்களுக்குப் பயன்தரக்கூடிய பாகிஸ்தானைச் சார்ந்த மதிப்பிற்குரிய மலிக் சுல்தான் ஹாரூன் கான் சாஹிப் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். ஹுஸூர் அவர்கள் அன்னாரது நற்குறிப்பை எடுத்துக் கூறியவாறு ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 05 ஏப்ரல் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **05 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் கூறவிருக்கிற பத்ர் போரின் சஹாபாக்களுள் முதலில் ***கிராஸ் பின் ஸிம்மா அன்ஸாரி (ரலி)*** உடையதாகும். கிராஸ் கஸ்ரஜின் கிளையான பனூ ஜிஷ்ம் கோத்திரத்தைச் சார்ந்தவர். அவரது தாயார் பெயர் உம்மே ஹபீப் ஆகும். ஹஸ்ரத் கிராஸ் உடைய சந்ததிகளில் ஸல்மா, அப்துர் ரஹ்மான், ஆயிஷா ஆகியோர் அடங்குவர். ஹஸ்ரத் கிராஸ் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார். உஹது நாளில் அவருக்கு 10 காயங்கள் ஏற்பட்டன. அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய திறமைமிக்க அம்பு எய்பவர்களில் ஒருவராவார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 425 கிராஸ் பின் ஸிம்மா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பத்ர் போரில் ஹஸ்ரத் கிராஸ், அபுல் ஆஸ் என்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மருமகனை கைது செய்து கொண்டு வந்தார்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 312 – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஹஸமில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ***உஸைத் பின் தய்யிஹான்*** ஆவார். ஹஸ்ரத் உபைத் பின் தய்யிஹானின் பெயரை அதிக் பின் தய்யிஹான் என்றும் கூறப்பட்டுள்ளது. இவர் தாயார் பெயர் லைலா பின்த் அனீக் ஆகும். இவரது அபுல் ஹிஸம் பின் தய்யிஹான் உடைய சகோதரர் ஆவார். இவர் பனூ அப்துல் அஷ்ஹல் உடைய நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர். ஹஸ்ரத் உபைத் 70 அன்ஸார்களுடன் பைஅத்தே அக்பாவில் கலந்து கொண்டவர்களில் ஒருவராவார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவருக்கும் மஸ்வூது பின் ரபீ இருவருக்குமிடையில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள். இவர் தமது சகோதரர் அபுல் ஹிஷம் உடன் பத்ர் போரில் பங்கு கொண்டார். இவர் உஹது போரில் ஷஹீதானார். இக்ரிமா பின் அபூஜஹ்ல் இவரை ஷஹீதாக்கினார். இவர் சபீன் போரில் ஹஸ்ரத் அலி (ரலி) இவர்களுடன் இருந்தவாறு போரிட்டு ஷஹீதானார் என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறு முரண்பாடு இருந்தாலும் கூட இரு அறிவிப்புகளிலும் உள்ள ஒற்றுமை அவர் ஷஹீதானார் என்பதாகும். இவரது சந்ததிகளில் இரு மகன்கள் உபைதுல்லாஹ் மற்றும் அப்பாத் பற்றிய குறிப்பு கிடைக்கிறது. தப்ரியின் கூற்றின்படி அப்பாத் அவர்களும் பத்ரில் பங்கு பெறும் வாய்ப்பு பெற்றிருந்தார். உபைதுல்லாஹ் பற்றி அவர் யமாமா போரில் ஷஹீதானதாக வருகிறது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 342,343 அபூ ஹைஷம் பின் தய்யிஹான் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 153 இபாத் பின் உபைது – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பிறகு **அபூ ஹன்னா** என்ற சஹாபி பற்றிக் கூறப்படும். அபூ ஹன்னான் மாலிக் பின் அம்ர். அபூ ஹன்னா இவரது சுட்டுப் பெயர் ஆகும். மாலிக் பின் அம்ர் இவரது பெயர் ஆகும். முஹம்மது பின் உமர் வாஅகிதி இவர் பத்ரில் கலந்து கொண்டதாகக் கூறுகிறார். இவரது பெயர் பற்றிக் கருத்து வேறுபாடு உள்ளது. சில அறிவிப்புகளின்படி இவரது பெயர் ஆமிர் மற்றும் ஸாபித் பின் நுஃமான் என்று கூறப்படுகிறது. இவரது சுட்டுப்பெயர் அபூ ஹப்பா மற்றும் அபூ ஹய்யா என்றும் கூறப்படுகிறது.

ஆனால் முஹம்மது பின் வாஅகிதி கூறுகிறார்: அபூ ஹப்பா என்ற சுட்டுப் பெயருடன் இருவர் காணப்படுகின்றனர். ஒருவர், ஹப்பா பின் வஸிஆ உமர். இரண்டாவது நபர், அபூ ஹப்பா பின் ஹப்தே ஹப்பா பின் மாஸினி. இந்த இரு பெயருடையவர்களும் பத்ர் போரில் கலந்து கொள்ளவில்லை. பத்ரில் கலந்து கொண்டவர்களில் எவரது சுட்டுப்பெயரும் அபூ ஹப்பா என்று இருக்கவில்லை.

மாறாக, பத்ர் போரில் கலந்து கொண்டவர்களின் சுட்டுப்பெயர் அபூ ஹன்னா என்று வந்துள்ளது. எனவே அபூ ஹன்னா இவரது சுட்டுப் பெயர் என்பதற்கு இந்த அடிப்படையில் அழுத்தம் தருகிறார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 365 அபூ ஹன்னா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 63 அபூ ஹன்னா அன்ஸாரி – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பிறகு கூறப்படுகிற சஹாபி **அப்துல்லாஹ் பின் ஸைத் பின் ஸஅபா** ஆகும். இவரை அப்துல்லாஹ் பின் ஸைத் அன்ஸாரி என்று கூறப்படுகிறது. இவரது சுட்டுப்பெயர் அபூ முஹம்மது ஆகும். தந்தை பெயர் ஸைத் பின் சாஅலியா ஆகும். இவரும் சஹாபியாவார். இவர் அன்ஸார்களின் கஸ்ரஜின் ஒரு கிளையான பனூ ஹிஷம் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவர் பைஅத்தே அக்பாவில் 70 அன்ஸார்களுடன் கலந்து கொண்டார்.

பத்ர், உஹது, அகழ் மற்றும் பிற போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார். மக்கா வெற்றியின்போது பனூ ஹாரிஸ் பின் கஸ்ரஜின் கொடி அவர்களிடம் இருந்தது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸைத் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன் அரபி எழுத அறிந்திருந்தார். அக்காலத்தில் எழுத்தறிவு மிகவும் குறைவாக இருந்தது. மிகக் குறைந்த மக்களே எழுதத் தெரிந்தவர்களாக இருந்தனர்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸைதின் சந்ததிகள் மதீனாவிலேயே தங்கி இருந்தனர். அவரது ஒரு மகன் பெயர் முஹம்மது ஆகும். தாயின் பெயர் சாதா பின்த் குலைப் ஆகும். ஒரு மகள் உம்மே ஹுமைத் ஆகும். இவரது தாயார் யமனைச் சார்ந்தவர். இவரது சகோதரர் ஹுரைஸ் பின் சுஹிக் ஆகும். இவரும் பத்ரில் போரின் சஹாபி ஆவார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 405,406 அப்தில்லாஹ் பின் ஸைது அன்ஸாரி – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 248 அப்தில்லாஹ் பின் ஸைது அன்ஸாரி – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இவரது ஒரு சகோதரி குரைபா பின் ஸைது ஆகும். இவரும் சஹாபியா ஆவார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 8 பக்கம் 271,272 குரைபா பின்த் ஸைது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அப்துல்லாஹ் பின் ஸைத் பின் ஸஅபா எத்தகைய சஹாபி என்றால் இவரது கனவில் தொழுகை அழைப்பு வார்த்தைகள் (அஸான்) அறிவிக்கப்பட்டன. அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தெரிவித்தார்கள்.

உடனே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் பிலாலிடம், ஹஸ்ரத் அப்துல்லாஹ் கனவில் கண்ட அதே வார்த்தைகளில் அஸான் கூறுமாறு கூறினார்கள். இந்த சம்பவம், மஸ்ஜிது நபவி கட்டப்பட்ட பிறகு ஹிஜ்ரி 1 ஆம் ஆண்டு நடந்ததாகும்.

(அல் இஸ்திஆப் மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 913 அப்தில்லாஹ் பின் ஸைது அன்ஸாரி – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

இதன் விபரம் இவ்வாறாகும். ஹஸ்ரத் அபூ உமைர் பின் அனஸ் அன்ஸாரிகளைச் சார்ந்தவராக இருந்தார். இவர் தனது சிறிய தந்தையாரிடமிருந்து அறிவிக்கிறார். அவர் கூறினார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களை எவ்வாறு தொழுகைக்கு ஒன்று கூட்டுவது என்று யோசித்தார்கள். தொழுகை நேரத்தில் ஒரு கொடியை ஏற்றலாம் என்று ஆலோசனை கூறப்பட்டது. மக்கள் அதனைப் பார்த்தால் மற்றவருக்கும் கூறுவார்கள் என்றதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அது பிடிக்கவில்லை.

அறிவிப்பாளர் கூறுகிறார்: அன்னாரிடம் யஹூதிகளின் அழைப்பு முறை போன்று உரத்த குரலில் மணி சப்தம் கொடுத்தால் மக்கள் வருவார்கள் என்றதும் அதையும் அன்னார் விரும்பவில்லை. இது யூதர்களின் நடைமுறையாகும் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: பிறகு அன்னாரிடம் சங்கு ஊதுவது பற்றி கூறப்பட்டது. அன்னார் அது கிறித்தவ நடைமுறை என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸைத் திரும்பிச் சென்றார்கள். பிறகு அப்துல்லாஹ் பின் ஸைது கவலையினால் துஆ செய்து வந்தார். அவருக்கு கனவில் அஸான் காட்டப்பட்டது.

அப்துல்லாஹ் பின் ஸைத் கூறினார்: நான் கனவில் பார்த்தேன். ஒரு மனிதர் இருந்தார். அவரது கையில் சங்கு இருந்தது. நான் அவரிடம், இறைவனின் அடிமையே! இதனை என்னிடம் விற்பாயா? என்று கேட்டேன். அவர், இதை வைத்து என்ன செய்வாய்? என்றார். நான், இதன் மூலம் தொழுகைக்கு அழைப்போம் என்றேன். அவர், அதனை விடச் சிறந்த ஒன்றை கூறவா? என்றார். நான் கண்டிப்பாக கூறுங்கள் என்றேன். அப்துல்லாஹ் அவர்கள் கூறுகின்றார்கள்: பிறகு அவர் அஸான் உடைய வார்த்தைகளைக் கூறிம்படி கூறினார்.

اَللّٰہُ أَکْبَرُ اللّٰہُ أَکْبَرُ۔ اَللّٰہُ أَکْبَرُ اللّٰہُ أَکْبَرُ۔ أَشْھَدُ أَنْ لَّا اِلٰہَ اِلَّااللّٰہُ۔ أَشْھَدُ أَنْ لَّا اِلٰہَ
اِلَّااللّٰہُ۔ أَشْھَدُ أَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰہِ۔ أَشْھَدُ أَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰہِ۔ حَیَّ عَلَی الصَّلَاۃِ۔ حَیَّ عَلَی
الصَّلَاۃِ۔ حَیَّ عَلَی الْفَلَاحِ۔ حَیَّ عَلَی الْفَلَاحِ۔ اَللّٰہُ أَکْبَرُ اللّٰہُ أَکْبَرُ۔ لَآ اِلٰہَ اِلَّااللّٰہُ۔

இதன் மொழியாக்கம் கூறுகிறேன். குழந்தைகள் மற்றும் புதிய முஸ்லிம்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். அஸான் கூறுகின்ற சிலருக்குக் கூடச் சிலவேளை பொருள் தெரிவதில்லை. 'அல்லாஹ் மிகப் பெரியவன்' என்று நான்கு முறை கூற வேண்டும். 'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை' என்று இரண்டு முறை கூற வேண்டும். 'முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்று சாட்சி கூறுகிறேன்' என்று இரண்டு முறை கூற வேண்டும்.

பிறகு 'தொழுகையின் பக்கம் வாருங்கள்' என்று இரண்டு முறை கூற வேண்டும். பிறகு 'வெற்றியின் பக்கம் வாருங்கள்' என்று இரண்டு முறை கூற வேண்டும். பிறகு 'அல்லாஹ் மிகப் பெரியவன்' என்று இரண்டு முறையும், 'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை' என்று ஒருமுறையும் கூறினார்.

பிறகு இந்த வார்த்தையைக் கூறி விட்டு அவர் சற்றுப் பின்வாங்கினார். பிறகு தொழுகையைத் தொழ நின்றால், இவ்வாறு கூற வேண்டும் என்று கூறினார்.

اَللّٰہُ أَکْبَرُ اللّٰہُ أَکْبَرُ۔ أَشْھَدُ أَنْ لَّآ اِلٰہَ اِلَّااللّٰہُ۔ أَشْھَدُ أَنَّ
مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰہِ۔ حَیَّ عَلَی الصَّلَاۃِ۔ حَیَّ عَلَی الْفَلَاحِ
قَدْ قَامَتِ الصَّلَاۃُ۔ قَدْ قَامَتِ الصَّلَاۃُ اَللّٰہُ أَکْبَرُ اللّٰہُ أَکْبَرُ۔ لَآ اِلٰہَ اِلَّااللّٰہُ۔

பிறகு அதிகாலைப் பொழுதானதும் நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கடைய சமூகத்திற்கு வந்தேன். நான் கனவில் பார்த்ததைக் கூறினேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், நிச்சயமாக அல்லாஹ் நாடினால் இது உண்மையான

கனவாகும் என்று கூறினார்கள். நீர் பிலாலுடன் சேர்ந்து நில்லுங்கள். நீர் பார்த்ததைக் கூறுங்கள். அவர் அதே வார்த்தையால் அஸான் கொடுக்கட்டும். ஏனெனில் அவரது குரல் உமது குரலை விட உரத்தது என்று கூறினார்கள். பிறகு நான் பிலாலுடன் நின்றேன். நான் கூறக்கூற அதற்கேற்ப அவர் அஸான் சொல்லத் தொடங்கினார்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அந்த அஸானை கேட்கும்போது வீட்டில் இருந்தார்கள். அவர்கள் தமது போர்வையை விலக்கிக் கொண்டு வெளியில் வந்து, உங்களை உண்மையுடன் அனுப்பிய இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ்வின் தூதரே! நானும் இதனைப் பார்த்தேன் என்றதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே என்றார்கள்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுஸ் ஸலாத் ஹதீஸ் எண் 498)

பிறகு அறிவிப்பில் இவ்வாறும் வார்த்தைகள் உள்ளன. உடனே ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்; இதுவே உண்மையானது என்றார்கள்.

(ஜாமி திர்மிதி, கிதாபுஸ் ஸலாத் மாஜாஅ ஃபீ பதவுல் அஸான் ஹதீஸ் 189)

மேலும் சீரத்துல் காத்தமுன் நபிய்யீனில் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் இன்னும் சில விளக்கங்களைக் கூறியுள்ளார்கள். பல்வேறு வரலாறுகளிலிருந்து எடுத்துக் கூறுகின்றார்கள். தொழுகைக்கான அறிவிப்பு செய்யும் ஏற்பாடு இல்லாமல் இருந்தது. சஹாபாக்கள் நேரத்தைக் கவனித்துத் தொழுகைக்காகக் கூடினர். ஆனால் இம்முறை நம்பத்தகுந்ததாக இருக்கவில்லை. மஸ்ஜிது நபவி ஆயத்தம் ஆனதும் எவ்வாறு முஸ்லிம்களை நேரத்தில் ஒன்று சேர்ப்பது என்ற பிரச்சனை பெரிதானது. சில சஹாபிகள் கிறித்தவர்கள் போன்று சங்கு ஊதலாம் என்றும் சிலர் யூதர்கள் போன்று மணி அடிக்கலாம் என்றும் கூறினர்.

சிலர் வேறு விதமாகக் கூறினர். ஹஸ்ரத் உமர், ஒருவரை நியமித்து தொழுகை நேரத்தில் தொழுகை நேரமாகி விட்டது என்று அறிவிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தக் கருத்தை விரும்பினார்கள். அஸானுக்கு முன் ஹஸ்ரத் உமர் உடைய கருத்து இதுவாகவே இருந்தது. அந்தக் கடமையை நிறைவேற்றுமாறு பிலாலுக்கு கட்டளையிடப்பட்டது. பிறகு தொழுகை நேரம் வரும்போது பிலால் உரத்த குரலில் اَلصَّلٰوةُ جَامِعَةٌ என்று அழைப்பார். மக்கள் ஒன்று கூடுவர். பிறகு தொழுகை தவிர மற்ற வேளைகளில் மக்களை பள்ளியில் ஒன்று கூட்ட இதே அறிவிப்பே செய்யப்பட்டது.

சிறிது காலத்திற்குப் பிறகு ஒரு சஹாபி அப்துல்லாஹ் ஸைத் உடைய கனவில் தற்கால அஸான் வார்த்தைகள் கூறப்பட்டன. அவர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சமூகத்திற்கு வந்து தனது கனவைக் குறிப்பிட்டார்கள். நான் கனவில், அஸான் ஆக இன்னின்ன வார்த்தைகளைக் கூறக் கேட்டேன் என்றதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அந்தக் கனவு இறைவன் புறமிருந்து வந்ததாகும் என்று கூறி பிலாலுக்கு இந்த வார்த்தைகளைக் கற்றுக் கொடுங்கள் என்று கட்டளையிட்டார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

ஒரு தற்செயலான ஒற்றுமை என்னவென்றால், முதன் முறையாக பிலால் இந்த வார்த்தைகளில் அஸான் கொடுத்ததும், ஹஸ்ரத் உமர் அதனைக் கேட்டு வேகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சமூகத்திற்கு வந்தார்கள். இன்று பிலால் என்ன வார்த்தைகளைக் கூறி அஸான் கொடுத்தார்களோ அதே வார்த்தைகளை நானும் கனவில் கண்டேன் என்று கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறும் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அஸான் வார்த்தைகளைக் கேட்டதும், இதற்கேற்ப வஹியும் வந்து விட்டது என்று கூறினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 271,272)

பஷீர் பின் முஹம்மது தமது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸைதிற்கு அஸான் வார்த்தைகள் கனவில் காட்டப்பட்டது. அவர் தமது எல்லாப் பொருள்களையும் ஸதகா கொடுத்தார். அதன் மூலமே அவரும் அவரது மகனும் வாழ்வைக் கழித்து வந்தார்கள். இதுவே அவரது வருமானத்திற்குரிய வழியாக இருந்தது. அவர் அதனை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஒப்படைத்து விட்டார்.

பிறகு அவரது தந்தை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து யாரஸூலல்லாஹ்! அப்துல்லாஹ் பின் ஸைத் தனது பொருள்களை ஸதகா கொடுத்து விட்டார். அதன் மூலமாகவே அவர் வாழ்வைக் கழித்து வந்தார் என்றார். உடனே ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ் பின் ஸைதை அழைத்து, நிச்சயமாக அல்லாஹ் உமது ஸதகாவை ஒப்புக் கொண்டு விட்டான். அல்லாஹ்வுக்காக அதனைச் செலவு செய்தீர். அதனை இறைவன் ஏற்றுக் கொண்டான். அதனை வாரிசுப் பொருளாக உமது தந்தையிடம் கொடுத்து விடு என்றார்கள்.

பிறகு பஷீர் கூறுகிறார்: நாங்கள் வாரிசுப் பொருளாக அதனை திரும்பப் பெற்றோம். இவ்வாறு அவரும் அவரது மகனும் திரும்ப வாரிசாகப் பெற்றார்கள்.

(மஃரூஃபத்துஸ் சஹாபா லாபீ நயீம் அல் அஸ்ஹாபி தொகுதி 3 பக்கம் 149 அப்தில்லாஹ் பின் ஸைது, ஹதீஸ் எண் 4172 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஒருமுறை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது நகத்தை பரக்கத்திற்குரியதாக அவரிடம் கொடுத்தார்கள். அதன் விளக்கம் இவ்வாறாகும்.

அப்துல்லாஹ் பின் ஸைத் உடைய மகன் முஹம்மது கூறினார்: அவரது தந்தையார் ஹஜ்ஜத்துல் விதாவின்போது மினா மைதானத்தின் குர்பானி கொடுக்கும் இடத்தில் குர்பானியின் வேளையில் வந்திருந்தார்கள். அவருடன் அன்ஸார்களுள் இன்னொருவரும் இருந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குர்பானியைப் பகிர்ந்தளித்தார்கள். அப்துல்லாஹ் பின் ஸைத் மற்றும் அவருடன் இருந்த அன்ஸாரிக்குச் சிறிதும் கிடைக்கவில்லை. பிறகு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு துணியில் தமது தலைமுடியை மழித்து வைத்து அதிலிருந்து மக்களுக்கு வழங்கினார்கள். பிறகு தனது நகத்தை வெட்டி அதனை அப்துல்லாஹ் பின் ஸைத் மற்றும் அவருடன் இருந்த அன்ஸாரிக்கு வழங்கினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 406 அப்தில்லாஹ் பின் ஸைது அன்ஸாரி – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆயிஷாவிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஒரு மனிதர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார். யாரஸூலல்லாஹ்! நிச்சயமாக நீங்கள் என்னை விட எனக்கு அதிக அன்பிற்குரியவர்கள் ஆவீர்கள். நிச்சயமாக நீங்கள் எனது குடும்பத்தை விட அதிக அன்பிற்குரியவர்கள் ஆவீர்கள். நிச்சயமாக நீங்கள் எனது குழந்தைகளை விட அதிக அன்பிற்குரியவர்கள் ஆவீர்கள். நான் வீட்டில் இருந்தால் உங்களை நினைவு கூர்கிறேன்.

எனக்கு பொறுமை ஏற்படுவதில்லை. நான் உங்களின் சமூகத்திற்கு வந்து விடுகிறேன். உங்களை நான் பார்க்கிறேன். எனது மற்றும் உங்களுடைய மரணம் நினைவுக்கு வந்தது. நான் உயிரை விட்டால் நீங்களோ சொர்க்கத்தில் நுழைவீர்கள். மற்ற நபிமார்களுடன் சேர்ந்து உங்களுக்கு உயர்வு கிடைக்கும். நான் அஞ்சுகிறேன். நான் ஜன்னத்தில் நுழைந்தால் நான் உங்களை அங்கு பார்க்க முடியாதே என்றார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அம்மனிதருக்கு எந்தப் பதிலும் கூறவில்லை. இந்நிலையில் ஜிப்ரயீல் ஒரு வசனத்துடன் இறங்கினார்.

وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ
الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ مِّنَ النَّبِيّٖنَ
وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَآءِ وَالصّٰلِحِيْنَ

அல்லாஹ் மற்றும் அவனது இந்த ரஸூலுக்கு கட்டுப்படுபவர்கள் அல்லாஹ் அருள் புரிந்தவர்களுடன் இருப்பர். அதாவது நபிமார்கள், ஸித்தீக்குகள், ஷஹீதுகள் மற்றும் ஸாலிஹீன்களுடன் இருப்பர். (4:70)

(தஃப்ஸீர் இப்னு கஸீர் தொகுதி 2 பக்கம் 311 அந்நிஸா 69 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றி ஷரீஅத் இல்லாத நபி வர முடியும் என்பதற்கு இந்த வசனத்தை நாம் எடுத்து வைக்கிறோம். அன்னாரைப் பின்பற்றுவதன் மூலம் ஸாலிஹிய்யத் என்ற நிலையிலிருந்து முன்னேறி நுபுவ்வத் வரை ஒருவர் செல்ல முடியும். எவ்வாறிருப்பினும் நுபுவ்வத் என்பது ஷரீஅத் அல்லாத நுபுவ்வத்தாக இருப்பினும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அடிமையாக இருப்பதன் மூலமே கிடைக்கிறது.

இது ஒரு பெரும் படித்தரமாகும். அல்லாஹ் யாருக்கு விரும்புகிறானோ அவருக்கு வழங்குறான். வரக்கூடிய மஸீஹ் மவ்வூது பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபியுல்லாஹ் என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஃபித்ன்... ஹதீஸ் எண் 2937)

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அடிமை என்ற முறையில் ஷரீஅத் இல்லாத நபியாக நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். இதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கத்மே நுபுவ்வத் மீது எந்தப் பங்கமும் ஏற்படாது. மாறாக அவர்களின் அந்தஸ்து இன்னும் உயரவே செய்கிறது. நுபுவ்வத் என்பது அன்னாரின் அடிமையாக இருப்பதன் மூலம் மட்டுமே கிடைக்க முடியும்.

இந்தப் பொருளை நாம் மட்டும் தருவதில்லை. பழைய கால பெரியவர்களும் அப்பொருளை வழங்கியுள்ளனர். இந்த வகையில் இமாம் ராகிப் இதே பொருளைத்தான் வழங்கியுள்ளார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அவர்களைப் பின்பற்றி அவர்களின் அடிமையாக ஷரீஅத் இல்லாத நபி வர முடியும் என்று கூறுகிறார்.

(தஃப்ஸீர் அல் பஹ்ருல் முஹீத் தொகுதி 3 பக்கம் 299 அந்நிஸா 69 – 2010 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இத்துடன் இந்த வசனம் குறித்த விளக்கத்தை நான் கொடுத்து விட்டேன்.

அல்லாமா ஸுர்கானி எழுதுகிறார்கள்: பல்வேறு நூல்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் ஸுஹ்பானுக்கும் இடையில் நடந்த சம்பவம் எழுதப்பட்டுள்ளது. யப்வுல் ஹயாத் என்ற விளக்கவுரையில் மகாதல் பின் சுலைமான் என்பவரை ஆதாரம் காட்டி எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸைத் அன்ஸாரி உடைய கனவில் அஸானைப் பார்த்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

அல்லாமா ஸுர்கானி எழுதுகிறார்: இது சரியென்றால் இருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இதனைக் குறிப்பிட்டிருக்கலாம். அப்போது இந்த வசனம் இறங்கியிருக்கலாம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பல தோழர்களுடன் இவ்விஷயம் நடந்துள்ளது.

(ஷரஹ் ஸர்கானி அல்லா மவாஹிப் லித்துன்யா தொகுதி 12 பக்கம் 417,418 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முதலில் கூறப்பட்ட சம்பவம் தவிர தஃப்ஸீர்களில் ஹஸ்ரத் சுப்ஹான் உடைய சம்பவமும் கூறப்பட்டுள்ளன. விபரம் என்னவென்றால் ஹஸ்ரத் சுப்ஹானுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அளவு கடந்த அன்பு இருந்தது. அவர் அதிக தூரம் பயணம் செய்ய முடிந்ததில்லை. ஒருநாள் அவர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்தபோது அவரது நிறம் மாறி இருந்தது. அவரது முகத்திலிருந்து கவலையின் அறிகுறி தென்பட்டது. உடனே ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எதனால் உமது நிறம் மாறியது என்று கேட்டார்கள்.

சுப்ஹான் கூறினார்: அல்லாஹ்வின் தூதரே! எனக்கு எந்த நோயும் இல்லை. உங்களைப் பார்க்க முடியவில்லையே என்பதைத் தவிர எந்த நோயும் இல்லை. சிறிது காலம் அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்க்கவில்லை. அவர் கூறினார்: உங்களைப் பார்க்க முடியாததால் அந்நிலை இருந்தது.

இந்நிலையில் எனக்கு இறுதி காலத்தைப் பற்றிய நினைவு வந்தது. எனக்குப் பயம் ஏற்பட்டது. நான் உங்களைப் பார்க்க முடியாதே? நீங்களோ நபிமார்களுடன் சேர்த்து உயர்த்தப்படுவீர்கள். நான் ஜன்னத்திற்கு சென்றால் கூட உங்கள் நிலைமையுடன் ஒப்பிடும்போது எனது நிலை மிகவும் தாழ்மையானதாக இருக்குமே? நான் சொர்க்கத்தில் நுழைய முடியா விட்டாலோ பிறகு நான் உங்களைப் பார்க்க முடியாதே என்றார்.

(தஃப்ஸீருல் பக்வி தொகுதி 1 பக்கம் 450 அந்நிஸா 69 பாகிஸ்தானில் ஹிஜ்ரி 1425 ல் அச்சிடப்பட்டது)

அல்லாமா ஸுர்கானி எழுதுகிறார்: அப்துல்லாஹ் பின் ஸைத் குறித்து மீண்டும் எழுதப்படுகிறது. அவரது மகன் அருகில் வந்தார். அவரிடம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள் என்ற செய்தியைக் கூறினார். உடனே அவர் கூறினார்:

اَللّٰهُمَّ اَذْهِبْ بَصَرِیْ حَتّٰی لَا اَرٰی بَعْدَ حَبِیْبِیْ مُحَمَّدًا اَحَدًا

அல்லாஹ்வே! எனது கண் பார்வையை எடுத்து விடு. ஏனெனில் முஹம்மது (ஸல்) அவர்களுக்குப் பிறகு வேறு யாரையும் பார்க்க விரும்பவில்லை எனறார். அதற்குப் பிறகு அவரது கண் பார்வை போய் விட்டது என்று கூறப்படுவதாக ஸுர்கானி எழுதுகிறார். அவர் குருடராகி விட்டார்.

(ஷரஹ் ஸர்கானீ அலல் மவாஹிப் லித்துன்யா தொகுதி 9 பக்கம் 84,85 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அவரது மரணம் பற்றி எழுதப்பட்டுள்ளது. அப்துல்லாஹ் பின் ஸைத் உடைய வஃபாத்திற்குப் பிறகு அது குறித்து முரண்பட்ட

கருத்துக்கள் இருந்தன. சிலர் உஹதுக்குப் பிறகு மரணித்ததாக கூறுகிறார்கள். ஆனால் பெரும்பாலும் கூறப்படுவது அப்துல்லாஹ் பின் ஸைத் அனைத்துப் போர்களிலும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார். அவரது மரணம் உஸ்மான் உடைய கிலாஃபத்தின் கடைசி காலத்தில் ஹிஜ்ரி 32 –ல் மதீனாவில் நிகழ்ந்தது என்று கூறப்படுகிறது.

அவரது கண் பார்வை சம்பந்தமான நிகழ்ச்சியை சரி என்று கேட்டுக் கொண்டால் அவரது மரணம் உஸ்மான் (ரலி) காலத்தில் நடந்திருக்கிறது. அப்போது அவரது வயது 64 ஆகும். அவரது ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத் உஸ்மான் தொழ வைத்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 406 அப்தில்லாஹ் பின் ஸைது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் லில்ஹாகிம் தொகுதி 5 பக்கம் 266 கிதாபுல் ஃபராயிஸ், ஹதீஸ் எண் 8187 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

பிறகு அடுத்த சஹாபி **மஅஸ் பின் அம்ர் பின் ஜமு** பற்றி கூறுகிறேன். ஹஸ்ரத் மஅஸ் பின் அம்ர் பனூ கஸ்ரஜின் கிளையான பனூ சல்மா கோத்திரத்தச் சார்ந்தவர். இவர் இரண்டாவது பைஅத்தே உக்பா மற்றும் பத்ர் உஹது போர்களிலும் கலந்து கொண்டார்கள். அவரது தந்தை அம்ர் பின் ஜமு. இவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபியாவார். இவர் உஹதிலும் கலந்து கொண்டார். இவரது தாயார் பெயர் ஹிந்த் பின்த் அம்ர் ஆகும்.

மூஸா பின் உக்பா, அபூமாஷர் ஆகியோரின் கருத்தின்படி இவரும் சகோதரர் முஹப்பஸ் பின் அம்ரும் பத்ர் போரில் கலந்து கொண்டனர். இவரது மனைவி பெயர் சுபைதா பின்த் அம்ர் ஆகும். இவர் பனூ கஸ்ரஜின் கிளையான பனூ சாயிதாவைச் சேர்ந்தவர். இவருக்கு, இப்பெண் மூலம் அப்துல்லாஹ் என்ற ஒரு மகனும், உமாமா என்ற ஒரு மகளும் இருந்தனர்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 426,427 மஅஸ் பின் அம்ர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா லாபின் கஸீர் பக்கம் 197 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மஅஸ் இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார். ஆனால் இவரது தந்தை அம்ர் பின் ஜமு தமது இணைவைப்புச் செயல்களை தொடர்ந்து செய்து வந்தார். அதில் கடுமையாக இருந்தார்.

சீரத் இப்னு ஹிஷாமில் எழுதப்பட்டுள்ளது. மஆஸின் தந்தை இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது பற்றி வருகிறது. ஒரு வருடம் முன்பு நான் இந்த சம்பவத்தை ஓரளவு கூறினேன். இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டு திரும்பியவர்கள் இஸ்லாத்தை நன்றாக எடுத்து வைத்தார்கள். அவர்களின் பெரியவர்கள் தமது பழைய இணைவைப்பில் நிலைநின்றனர். அவர்களுள் ஒருவர் அம்ர் பின் ஜமு ஆவார். அவரது மகன் மஅஸ் பின் அம்ர் இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டிருந்தார்கள். அப்போது அவர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்.

அம்ர் பின் ஜமு பனூ சல்மாவின் தலைவர்களுள் ஒருவராக இருந்தார். அவர்களுள் பெரியவர்களுள் ஒருவரும் ஆவார். அவர் தமது வீட்டில் மரத்தாலான சிலையை உருவாக்கி வைத்திருந்தார். அக்காலத்தின் பெரிய மனிதர்கள் உருவாக்கி வைத்திருந்தது போன்று இவரும் வைத்திருந்தார். அது மனாத் என்று அழைக்கப்பட்டது. அதனை வணங்கு பொருளாக்கி அதற்கு கண்ணியமும் மரியாதையும் செய்து வந்தனர். பனூ சல்மாவின் சில இளைஞர்கள் இஸ்லாத்தை ஏற்றதும் அவர்களுள் அம்ர் பின் ஜமு உடைய மகன் மஅஸ் பின் அம்ர் பின் ஜமுவும் ஒருவர். அவர் இஸ்லாத்தை ஏற்றார்.

இரண்டாவது பைஅத்தே உக்பாவில் இரவில் அம்ர் பின் ஜமு உடைய சிலை இருந்த வீட்டில் நுழைந்து அதைத் தூக்கி வந்து விட்டார். அதனை பனூ சல்மாவின் புல் மற்றும் குப்பைகளைப் போடும் குழியில் தூக்கி போட்டு விட்டார். காலையில் அம்ர் எழுந்ததும், உமக்கு அழிவு உண்டாகுக. எவர் எனது வணங்கு பொருளைத் தூக்கி எறிந்தார்? என்றார்.

பிறகு அதனைத் தேடிச் சென்றார். பிறகு அதனைக் கண்டதும் எடுத்து கழுவி சுத்தம் செய்து விட்டு, அதனிடம், இறைவன் மீது ஆணையாக! உன்னை இவ்வாறு செய்தவரை நான் அறிந்தால் நிச்சயமாக அவரை இழிவுபடுத்துவேன் என்று கூறினார். பிறகு இரவு வந்ததும் அம்ர் தூங்கி விட்டார். அவர் மகன் மீண்டும் அவ்வாறே செய்தார். பிறகு காலையில் அதனை மீண்டும் தேடி எடுத்து சுத்தம் செய்தார். பல இரவுகள் இந்த சம்பவங்கள் நடந்து வந்தன.

அம்ர் பின் ஜமு வீசப்பட்ட இடத்திலிருந்து எடுத்து வந்து கழுவி சுத்தம் செய்து தனது வளை எடுத்து அதன் கழுத்தில் தொங்க விட்டு அல்லாஹ்வின் மீது ஆணையாக! யார் இப்படி செய்கிறார் என்று எனக்குத் தெரியாது. உனக்கு ஏதாவது சக்தி இருந்தால் அதனைத் தடுத்து விடு. உனது வாள் உன்னிடமே உள்ளது என்றார். பிறகு மாலை ஆனதும் அவர் உறங்கியதும் அவரது மகன் உள்ளடங்கிய இளைஞர்கள் அதே போன்று செய்தனர். அதன் கழுத்திலிருந்து வாளை எடுத்து விட்டு ஒரு இறந்த நாயுடன் சேர்த்து அதனை கட்டி பனூ சல்மாவின் ஒரு பழைய கிணற்றில் எறிந்து விட்டனர். அதில் புல் மற்றும் குப்பைகள் கொட்டப்பட்டு வந்தன.

காலையில் அம்ர் பின் ஜமு எழுந்து சிலை அங்கு இல்லாததைக் கண்டு தேடினார். அது ஒரு கிணற்றில் செத்த நாயுடன் கட்டப்பட்டு கிடப்பதைப் பார்த்து அவரது அறிவு தெளிந்தது. முஸ்லிம்கள் அவருக்கு இஸ்லாத்தின் போதனையை எடுத்து வைத்தனர். அவர் அல்லாஹ்வின் கருணையால் இஸ்லாத்தை ஏற்றார்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 207,208 – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஹஸமில் அச்சிடப்பட்டது)

இப்னு ஹிஷாம் உடைய வரலாற்று நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அந்த சிலை வாள் வைத்துக் கொண்டும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அத்தகைய கடவுளை வணங்கி என்ன பயன்? என்று நினைத்தார். ஹஸ்ரத் மஅஸ் பின் அம்ர் பின் ஜமு அபூஜஹிலைக் கொன்றவர்களுள் ஒருவராகவும் கூறப்படுகிறார்.

இந்த வகையில் புகாரியின் அறிவிப்பில் வருகிறது. ஸாலிஹ் பின் இப்ராஹீம் தனது தந்தை வழிப்பாட்டனார் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃபிடமிருந்து அறிவிக்கிறார். பத்ர் போரின் அணி வகுப்பில் அவர் நின்று கொண்டிருந்தார். நான் எனது வலமும் இடமும் பார்த்தேன் என்று அவர் கூறுகிறார். இரு அன்ஸாரி சிறுவர்கள் நின்றனர். நான் நல்ல இளைஞர்கள் பலசாலிகள் உடன் நின்றிருந்தால் நன்றாக இருக்குமே? என்று நினைத்தேன்.

அதற்குள் அவர்களில் ஒருவர் என்னிடம், சிறிய தந்தையே! நீங்கள் அபூஜஹிலை அறிவீர்களா? என்று கேட்டார். நான் ஆம், சகோதரரின் மகனே! அவரிடம் உனக்கு என்ன வேலை உள்ளது? என்று கேட்டேன். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அவர் ஏசுவதாக கேள்விப்பட்டேன். என் உயிர் எவன் கையில் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணை! நான் அவனைக் கண்டால் அவர் என்

கண்ணை விட்டுத் தப்பிக்கவே மாட்டார். எங்கள் இருவரில் ஒருவரின் மரணம் முன்னரே தீர்மானிக்கப்பட்டது நடக்கும் வரை நான் கண்ணைத் திருப்பவே மாட்டேன் என்றார். நான் மிகவும் வியந்து போனேன். அப்போது இரண்டாவது சிறுவர் என்னை அழுத்தினான். அதேபோன்று அவனும் கேட்டான். நான் அபூஜஹிலை மக்களுக்கு மத்தியில் சுற்றி வரக் கண்டு, பார். இதுதான் நீ கேட்ட உனது நண்பர் என்று கூறினேன். நான் கூறியதும் இருவரும் உடனேயே வாளை உருவிக் கொண்டு சென்று தாக்கி அவனை வெட்டினர்.

பிறகு இருவரும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தனர். தாம் அபூஜஹிலை கொன்று விட்டதாக தெரிவித்தனர். உங்கள் இருவரில் எவர் கொன்றார் என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். இருவரும் நான், நான் என்றனர். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர்களிடம் உங்கள் வாளை சுத்தம் செய்து விட்டீர்களா? என்று கேட்டார்கள். அவர்கள், இல்லை என்றனர். உடனே அன்னார் வாளைப் பார்த்து விட்டு நீங்கள் இருவருமே வெட்டியுள்ளீர்கள். அவனது போர்ப்பொருள்கள் மஆஸ் பின் அம்ர் பின் ஜமுவுக்கு கிடைக்கும் என்றார். இருவரின் பெயர் மஆஸ் ஆக இருந்தது. மஆஸ் பின் அஃப்ரா (ரலி) மற்றும்ஸ் முஆஸ் பின் அம்ர் பின் ஜமூஃ (ரலி).

(சஹீஹ் புகாரி, கிதாப் ஃபர்ஸுல் ஹம்ஸ்... ஹதீஸ் எண் 3141)

மஆஸ் பின் மஹல் இருவரின் சம்பவங்களை இதன்று முன்பும் நான் கூறியுள்ளேன். இங்கு மீண்டும் வருகிறதே என்று சந்தேகம் வரலாம். எனவே கொல்லப்பட்ட சம்பவம் பல்வேறு ஹதீஸ் நூல்களிலும் வரலாற்று நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. இந்த அறிவிப்பு புகாரியிலும் எழுதப்பட்டுள்ளது. அதில் முஆஸ் பின் அம்ர் பின் ஜமூஃ, ஹஸ்ரத் மஆஸ் பின் அப்ரா இருவரும் அபூஜஹிலைத் தாக்கி கொன்றனர். அப்துல்லாஹ் பின் மஸ்வூது அபூஜஹிலின் தலையை உடலிலிருந்து துண்டாக எடுத்தார் என்று வருகிறது. மற்ற இடங்களில் மஆஸ் மற்றும் முஹப்பஸ் உடைய குறிப்பு வருகிறது.

எவ்வாறிருப்பினும் புகாரியிலேயே சில அறிவிப்புகளில் வருகிறது. அப்ராவின் இரு மகன்கள் மஆஸ் முஹப்பிஸ் இருவரும் கொன்றார்கள். பிறகு அப்துல்லாஹ் பின் மஸ்வூது சென்று பணியை முழுமைப்படுத்தினார். இந்த வகையில் புகாரியில் ஓர் அறிவிப்பில் இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அனஸ் அறிவிக்கிறார். ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் பத்ர் நாளில் அபூஜஹிலுடைய நிலை எவ்வாறானது? என்று கேட்டார்கள்.

அப்துல்லாஹ் பின் மஸ்வூது சென்று பார்த்தார். அப்ராவின் இரு மகன்களான முஆஸ் மற்றும் முஹப்பிஸ் வாளால் அவனை வெட்டி விட்டார்கள். அவன் மரணிக்கும் நிலையை அடைந்து விட்டான். இப்னு மஸ்வூது, நீர் அபூஜஹில்தானா? என்று கேட்டு அவனது தாடியைப் பிடித்தார்கள். அவன், நீ கொன்றவர்களுள் இவரை விட பெரிய ஆள் உண்டா? உமது சமுதாயம் இவரை விட பெரிய ஆள் எவரையாவது கொன்றிருக்குமா? என்றார்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி, பாப் கதல் அபூ ஜஹ்ல் ஹதீஸ் எண் 3962)

இந்த இரு அறிவிப்புகளும் புகாரியிலேயே கிடைக்கின்றன. முஆஸ் என்று இரு பெயர்களும் ஓரிடத்தில் முஆஸ் முஅப்பஸ் என்று வருகிறது. ஓரிடத்தில் இருவரின் தந்தைகள் பெயர் வெவ்வேறாகவும் ஓரிடத்தில் ஒன்றாகவும் வருகிறது. ஓரிடத்தில் ஒரு தந்தையின் இரு மகன்கள் என்று வருகிறது.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் ஜைய்னுல் ஆபிதீன் வலியுல்லாஹ் சாஹிப், அபூஜஹிலைக் கொன்றவர்களை எவ்வாறு உண்மைப்படுத்துவது எவ்வாறு தெளிவுபடுத்த வேண்டும் என்று விளக்கியவாறு கூறுகிறார்கள்: சில அறிவிப்புகளில் வருகிறது. அப்ராவின் இரு மகன்கள் மஆஸ் மற்றும் முஅப்பிஸ் இருவரும் அபூஜிஹிலை மரணத்திற்கு அருகில் கொண்டு சென்றனர். பிறகு அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவனது தலையை உடலை விட்டு பிரித்தார்கள் என்று வருகிறது.

(சஹீஹுல் புகாரி தொகுதி 5 பக்கம் 491 அடிக்குறிப்பு, உருது மொழியாக்கம், ரப்வாவிலுள்ள நஸாரத் இஷாஅத் அச்சிட்டது)

இமாம் இப்னு ஹிஜ்ர் இந்த சாத்தியக்கூறை கூறுகிறார்கள்: முஆஸ் பின் அம்ர் முஆஸ் பின் கப்ரா மற்றும் மஅவஸ் பின் அப்ரா ஆகியோர் தாக்கியிருப்பார்கள். எனவே முதல் அறிவிப்பில் வேறு சிலரைப் பற்றி வருகிறது. பத்ஹுல் பாரி என்ற விரிவுரையில் வருகிறது. இந்த மூவருமே கொன்றிருக்க வாய்ப்புள்ளது. அல்லாமா பத்ருத்தீன் அபூஜஹிலை முஆஸ் பின் அம்ர் பின் ஜமு மற்றும் முஆஸ் பின் அப்ரா மற்றும் அப்துல்லாஹ் பின் மஸ்வூது ஆகியோர் கொன்றனர். அப்துல்லாஹ் அவரது தலையை துண்டாக்கி எடுத்தார். அதனை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் எடுத்து வந்தார்.

(உம்தத்துல் காரி தொகுதி 17 பக்கம் 120 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

அல்லாமா பத்ருத்தீன் ஆஃனி மேலும் எழுதுகிறார்: சஹீஹ் முஸ்லிமில் வருகிறது. முஆஸ் பின் அம்ர் பின் ஜமு முஆஸ் பின் அஃப்ரா இருவரும் அபூஜஹிலைக் கொன்றனர். மஆஸ் பின் அப்ராவின் தந்தை ஹாரிஸ் பின் ரிஅபாவாகும். அப்ரா அவர்களின் தாயார் உபைத் பின் ஸாலியா பின்த் ஜாரியாவின் மகள் ஆவார்.

அதேபோன்று புகாரி கிதாபுல் ஜிஹாது மஅல்லம் யகுமிஸல் அஸ்லாபில் வருகிறது. ஹஸ்ரத் மஆஸ் பின் அம்ர் அபூஜஹிலின் காலை வெட்டினார். பிறகு முஆஸ் பின் அப்ரா அவரை வெட்டினார். அவரைக் கீழே விழச் செய்தார். பிறகு அவனை விட்டு விட்டார்கள். அவனிடம் உயிர் மட்டுமே எஞ்சியிருந்தது. இந்நிலையில் அப்துல்லாஹ் பின் மஸ்வூது வந்து அவனது தலையை உடலிலிருந்து வெட்டி எடுத்தார்.

(உம்தத்துல் காரி தொகுதி 17 பக்கம் 121,122 ஹதீஸ் எண் 3962 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுர்கானி உடைய அறிவிப்பு குறித்து கூறப்பட்டுள்ளது. அப்துல்லாஹ் பின் மஸ்வூது அபூஜஹிலைப் பார்த்தார். அவன் தனது இறுதி மூச்சை விட்டுக் கொண்டிருந்தான். அப்துல்லாஹ் பின் மஸ்வூது தமது காலை அவனது கழுத்தில் வைத்தவாறு, அல்லாஹ்வின் எதிரியே! அல்லாஹ் உன்னை இழிவுபடுத்தி விட்டான் என்றார். உடனே அபூஜஹில் பெருமையுடன் நான் எந்த இழிவுக்கும் உள்ளாகவில்லை. நீர் என்னை விட கண்ணியத்திற்குரிய எவரையேனும் வெட்டியிருக்கிறீரா? உம்மிடம் வேறு எந்த மரியாதையையும் என்னால் உணரவில்லை என்று கூறி அப்துல்லாஹ் பின் மஸ்வூது கூறியதும் அவன், மைதானம் எவர் கைக்கு வந்தது என்று கேட்டான். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது, அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் வெற்றி பெற்றார்கள் என்றார்.

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறும் வருகிறது. அபூஜஹில், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களிடம் கூறுக. முழு வாழ்விலும் நான் அவரது எதிரியாக இருந்தேன். இப்போதும் நான் அந்த எதிர்ப்பின் எல்லையிலேயே உச்சத்திலேயே உள்ளேன் என்றான். உடனே அப்துல்லாஹ் பின் மஸ்வூது அபூஜஹிலின் தலையை தனியாக வெட்டி எடுத்தார்கள். அவனது தலையை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தார். அன்னார், நான் அல்லாஹ்விடம் எவ்வாறு எல்லா நபிமார்களை விடவும் கண்ணியத்திற்கும் மரியாதைக்கும் உரியவனாக இருக்கிறேனோ

எனது உம்மத் மற்ற எல்லா உம்மத்துகளை விடவும் கண்ணியத்திற்குரியதோ அதே போன்று இந்த உம்மத்தின் ஃபிர்அவ்ன் மற்ற எல்லா உம்மத்துகளின் ஃபிர்அவ்ன்களை விடவும் கடுமையானவன் ஆவான்.

அதற்கு காரணம் ஹத்தா இதா அத்ரகஹுல் கரக்கு கால ஆமன்து அன்னஹு லாயிலாஹ இல்லல்லதீ ஆமனத் பிஹி பனூ இஸ்ராயீல் என்று திருக்குர்ஆனின் சூரா யூனுஸில் வருகிறது. நான் ஈமான் கொண்ட அந்த இறைவனை தவிர வேறு வணங்குபொருள் இல்லை என்று ஃபிர்அவ்ன் கூறினார். இந்த உம்மத்தின் ஃபிர்அவ்ன் தமது பகைமையிலும் நிராகரிப்பிலும் உயர்ந்தவன். மரணிக்கும்போது அபூஜஹில் கூறிய வார்த்தையிலிருந்து தெரிய வருகிறது.

இது தவிர அறிவிப்புகளில் அபூஜஹிலின் அழிவு குறித்து இவ்வாறும் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூஜஹிலின் தலையைப் பார்த்து விட்டுக் கூறினார்கள். அல்லாஹுல்லஸி லாயிலாஹ இல்லாஹு. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அதேபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று முறை கூறினார்கள்.

அல்ஹம்துலில்லாஹில்லஸி அய்ஸல் இஸ்லாம வஅஷ்லஹி. எல்லா புகழுக்கும் உரியவன் அல்லாஹ்வே. அவன் இஸ்லாம் மற்றும் அதனை ஏற்றுக் கொண்டவர்களுக்கு கண்ணியம் வழங்கினான். பிறகு இவ்வாறும் காணப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு ஃபிர்அவ்ன் உண்டு. இந்த உம்மத்தின் ஃபிர்அவ்ன் அபூஜஹில் ஆவான். அவனை அல்லாஹ் மிகவும் மோசமான நிலையில் கொலையுறச் செய்தான்.

(ஷரஹ் ஸர்கானீ அலல் மவாஹிப் லித்துன்யா தொகுதி 2 பக்கம் 297,298 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மஆஸ் பின் அம்ர் பின் ஜமுவின் மரணம் உஸ்மான் (ரலி) அவர்களுடைய காலத்தில் நடந்தது.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 6 பக்கம் 114 மஆஸ் பின் அம்ர் பின் ஜமூஃ – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

கலிபா பின் கயாத் பின் அறிவிக்கிறார். ஹஸ்ரத் மஆஸ் பின் அம்ர் பின் ஜமுவுக்கு பத்ர் நாளில் ஒரு காயம் ஏற்பட்டது. பிறகு அதன் வேதனையுடன் உஸ்மான் உடைய காலம் வரை வாழ்ந்தார்கள். பிறகு மதீனாவில் மரணித்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவரது ஜனாஸாவைத் தொழ வைத்தார்கள். அன்னார் ஜன்னத்துல் பகியில் அடக்கம் செய்யப்பட்டார்கள். ஹஸ்ரத் அபூஹுரைரா உடைய அறிவிப்பு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மஆஸ் பின் அம்ர் பின் ஜமு எத்தகைய நல்ல மனிதர்? என்று கூறினார்கள்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 4 பக்கம் 140,141 ஸிக்ர் மனாகிப் மஆஸ் பின் அம்ர் பின் ஜமூஃ ஹதீஸ் எண் 5895–5897 – 2002–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ் ஆயிரக்கணக்கான ரஹ்மத்துகளை இவர்களின் மீது இறக்குவானாக. இவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது ஹபீபின் அன்பில் மூழ்கி அவனது திருப்தியைப் பெறுபவர்களாகினர்.

தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுகை நடத்துவேன். அவர் கண்ணியத்திற்குரிய மலக் சுல்தான் ஹாரூன் கான் சாஹிப் உடையது. இவர் 27 மார்ச் அன்று இஸ்லாமாபாத்தில் வஃபாத் ஆனார்கள். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவரது பெரிய மகன் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹின் மருமகன் ஆவார். அன்னாரது மகளுடன் திருமணமாகி இருந்தது. மலக் சுல்தான் ஹாரூன் சாஹிப் பிறப்பு அஹ்மதியாவார். இவரது தந்தை கர்னல் மலிக் சுல்தான் முஹம்மது கான் சாஹிப் ஆவார். இவர் 23 வயதில் 1923 –ல் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கையில் பைஅத் செய்திருந்தார். இவர் தமது குடும்பத்தில் தனி அஹ்மதி ஆவார். இவருக்கு முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள்தான் திருமணம் செய்து வைத்தார்கள்.

கண்ணியத்திற்குரிய ஆயிஷா ஸித்தீகா சாஹிபா என்ற சவுத்ரி ஃபத்ஹே முஹம்மது ஸியால் உடைய மகளுடன் திருமணம் செய்து வைத்தார்கள். இவரது குடும்பம் பஞ்சாபின் கண்ணியமிக்க குடும்பங்களில் ஒன்று. நவாப் குடும்பம். மலக் அமீர் முஹம்மது கான் மேற்கு பாகிஸ்தானின் கவர்னராக இருந்தவர். நவாப் காலாபாக் என்ற பெயரில் பிரபல்யமாக இருந்தார். அன்னாரின் தந்தை கர்னல் மலிக் சுல்தான் அவர்களின் சகோதரர் ஆவார். இவரது தந்தை வழிப்பாட்டனார் மலிக் சுல்தான் அர்குருகான் ஆவார்.

அக்காலத்தில் இந்தியா காலனி நாடாக இருந்ததனால் இவருக்கு பெரிய அந்தஸ்து இருந்தது. இவரது மகன் மலிக் சுல்தான் முஹம்மது சாஹிபிற்கு நான்கு வருடம் பிறகு அஹ்மதிய்யத்தை ஏற்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் உலகவாதியாக இருந்தார். ஆனால் அவருக்கு நற்பேறு இருந்தது. எனவே மார்க்கத்தின் பக்கம் கவனம் திரும்பியது. நற்பேற்றால் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

மலிக் சுல்தான் ஹாரூன் கான் சாஹிபுடைய திருமணம் சபியா ஹமீதா சாஹிபா என்ற சவுத்ரி அப்துல் ஹமீது சாஹிபுடைய மகளுடன் நடந்தது. சவுத்ரி அப்துல் ஹமீது சாஹிப் நவாப் குடும்பத்தைச் சார்ந்தவர். அவரது மகளுடன் திருமணம் நடந்தது. மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் திருமணத்தை நடத்தினார்கள்.

மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நிகாஹ்வின்போது கூறினார். ஃபத்ஹே முஹம்மது சாஹிப் ஸியால் இங்கிலாந்து மிஷனின் நிறுவனர் ஆவார். இவர் முபல்லிக் ஆவார். சவுத்ரி ஃபத்ஹே முஹம்மது ஸியால் அவர்கள் எனது கண்ணியத்திற்குரிய பெரியவர் ஆவார். என் மீது சிறந்த கருணை காட்டியுள்ளார்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் கூறுகிறார்கள்: எனது சிறிய வயதில் அனுபவமில்லாத வயதில் தம்முடன் அழைத்துச் சென்று எனது அனுபவத்தை பரந்ததாக ஆக்கினார். கிராமப் புறங்களில் வசிப்பவர்கள் மீது எனக்கு மறைமுகமான பிடிப்பு இருந்தது. அதனை வெளிப்படுத்தும் வாய்ப்பு ஃபத்ஹே முஹம்மது ஸியால் சாஹிபுடன் வாழ்ந்த காலத்தில் ஏற்பட்டது.

மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் கூறுகிறார்கள்: இப்போது கூட ஒரு கிராமப்புற மனிதருடன் சந்திப்பு நிகழ்ந்தால் எந்தப் பகட்டுமின்றிப் பேசுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். அந்த மகிழ்ச்சி ஒரு நகரத்தில் வசிக்கும் மனிதருடன் பழகும்போது ஏற்படுவதில்லை. ஏனெனில் நகரத்தில் வசிப்பவர்களிடம் பேச்சில் ஒரு பகட்டு இருக்கிறது. இதனால் அவர்களுடன் பேசும்போது நம்மை அறியாமலும் கேட்காலும் நாமும் கூட பகட்டாகப் பேசத் தொடங்குகிறோம்.

எவ்வாறிருப்பினும் எனது இந்த கருணைமிக்க பெரியவரின் மகள் வழிப் பேரன் மலிக் சுல்தான் ஹாரூன் சாஹிபுடைய நிகாஹ் நடக்கிறது. அதனை நான் அறிவிக்கிறேன். பிறகு நமது பெரியவர்கள் எவ்வாறு தன்னலமற்று இறைவனின் மார்க்கத்திற்கு தொண்டு செய்தார்களோ அந்த உணர்வு அவர்களின் சந்ததிகளிடம்

நிலைத்திருக்க துஆ செய்யுங்கள். அது வெளிப்பட்டுமாக என்றார்கள்.

(குத்பாத்தே நாஸிர் தொகுதி 10 பக்கம் 437,440)

இன்று அவரது மரணத்தைப் பற்றிய குறிப்பு கூறப்படுகிறது. மர்ஹூம் ஹாரூன் சாஹிபுடைய சந்ததிகளும் கிலாஃபத்துடன் தமது தொடர்பை நிலைநாட்டுவது மட்டுமின்றி தொடர்பை உறுதிப்படுத்துவார்களாக. மூன்று மகன்கள் மூன்று மகள்கள் இருந்தனர். பெரிய மகன் சுல்தான் முஹம்மது கான் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மருமகன் ஆவார். அவர் வாழ்ந்த பகுதிக்கு அருகில் பொதுமக்களுக்கு தொண்டு செய்துள்ளார். தேவை உடையவர்களுக்கு உதவி செய்துள்ளார்.

பெண்கள் கூறுகிறார்கள்: மலிக் சாஹிப் வாழ்ந்த காலத்தில் அந்தப் பகுதியில் நாங்கள் பாதுகாப்பாக உணர்ந்தோம். அவரது மரணத்திற்குப் பிறகு எங்களுக்கு சற்று பயம் ஏற்பட்டுள்ளது. ஹட்டக் பகுதி எதிர்ப்பு மற்றும் கடின உள்ளம் கொண்டவர்கள் அதிகம் ஆகும். ஏழைகளின் உரிமைகள் வழங்கப்படுவதில்லை. பெரிய பொறுப்புள்ள மனிதராக இருந்தும் பகுதியின் கண்ணியத்திற்கு உரியவராக இருந்தும் ஏழைகளுக்கு நிறைய தொண்டு செய்வார்.

கனடாவில் இருக்கும் இவரது சகோதரி ராஸிதா ஸியால் சாஹிபா கூறுகிறார்: சுல்தான் ஹாரூன் கான் சாஹிப் நிறைய நல்ல சிறப்புகள் உள்ளவர். அஹ்மதிய்யத்திற்காகப் பெரும் தன்மானமுள்ளவர். கிலாஃபத்திற்காக உயிரைக் கொடுப்பவர். நண்பர்களுக்கு உண்மையான நண்பர். எதிரிகளுக்குக் கடினமானவர். ஏழைகளுக்கு உதவி செய்பவர். ஒருமுறை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஒரு கடிதத்தில், உமது தந்தையார் கர்னல் சுல்தான் முஹம்மது கான் சாஹிப் அஹ்மதிய்யத்திற்காக உருவப்பட்ட ஒரு வாள் ஆவார் என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

உமது சகோதர்களிலும் அந்த சாயல் காணப்படுகிறது. ஒருமுறை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அவரிடம் கூறினார்கள். அப்பகுதியில் எதிர்ப்பு அதிகம் இருந்தது. அப்பகுதியின் எதிர்ப்புக்கான காரணம் சில இடங்களில் சொத்துக்களினால் எதிர்ப்பு ஏற்படுகிறது. அப்போது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், குண்டுகள் வரும். ஆனால் தலை மேல் போய் விடும். உமக்கு எதுவும் ஆகாது என்று கூறினார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் அந்த வார்த்தையை நாங்கள் நிறைவேறக் கண்டோம்.

1977 –ல் சுல்தான் ஹாரூன் மீது ஃபத்ஹே ஜங்க் காவல்நிலையத்தில் வைத்து கொலை முயற்சி நடந்தது. குண்டுகள் சென்றன. தலைக்கு மேல் பறந்து போனது. அவர்களுக்கு ஒரு சிராய்ப்பு கூட ஏற்படவில்லை. அல்லாஹ் அற்புதமான முறையில் அவரைப் பாதுகாத்தான். ஏழைகள் மற்றும் பெரியவர்களுக்கு கொடையாளியாக இருந்தார்கள். பலவீனமானவர்கள் ஒன்றுமற்றவர்களுக்கு உதவி செய்தார்கள்.

அவரது பெரிய மகன் மலிக் சுல்தான் ரஷித் கான் சாஹிப் கூறுகிறார்கள்: எமது தந்தையாரின் மரணத்திற்குப் பிறகு எமது வீட்டில் உண்மையான தலைவர் அவர்களேதான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய கலீஃபாக்கள் மீது உண்மையான பேரன்பு கொண்டவராக இருந்தார்கள். 1974 –ன் சம்பவத்திற்குப் பிறகு ஒருமுறை ஒரு பெரிய அதிகாரி அவரிடம், ஹஸ்ரத் சாஹிப் மீது உங்களது ஈமானை இப்போது எந்த நிலையில் பார்க்கிறீர்கள்? என்று கேட்டார். பஞ்சாபியில், இரும்பைப் போன்று உறுதியாகப் பார்க்கிறேன் என்றார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஹிஜ்ரத் செய்த போது அந்த பயணத்தில் கராச்சி வரை உடன் சென்றார்கள்.

ரஷித் சாஹிப் எழுதுகிறார்கள்: நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கடிதம் என்னிடம் பாதுகாப்பாக உள்ளது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஒரு கடிதத்தில், அவரை அஹ்மதிய்யத்தின் ஜெனரல் மற்றும் இன்னோர் இடத்தில் பிரியம் மற்றும் தன்மானத்தின் உருவிய வாள் என்றும் கூறியுள்ளார்கள்.

இரவில் நஃபில் தொழுகை திருக்குர்ஆன் ஓதுதல் விஷயத்தில் எவ்வாறு இருந்தார்கள் என்றால் ரஷித் சாஹிப் எழுதுகிறார்கள்: மிகவும் குறைவான மக்களுக்குத்தான் அதுபற்றி தெரியும். ஏனென்றால் அன்னார் அதனை வெளிப்படுத்தியதில்லை. ஆனால் இந்த இரண்டு விஷயங்களையும் முறைப்படி நிறைவேற்றுபவர்களாக அன்னார் இருந்தார்கள்.

அவர் எழுதுகிறார்: ஒருமுறை எனது பெரிய சகோதரர் என்னுடன் இருந்த நேரத்தில் நாங்கள் இருவரும் ஒரே அறையில் 4 மாதங்கள் வரை தங்க வேண்டி இருந்தது. அந்நாட்களில் எனக்கு உட்கார எழச் சிரமப்பட்டேன். அவர் என்னுடன் அறையில் இருந்தார். என்னை கவனித்துக் கொள்பவராக இருந்தார். அப்போது அவரை நஃபில்கள் மற்றும் திலாவத் தொடர்ந்து செய்பவராகக் கண்டேன்.

அவர் கூறுகிறார்: நீங்கள் ஏன் சிரமப்படுகிறீர்கள்? நான் பணியாள் வைத்துக் கொள்கிறேன். அவர் எனக்கு தொண்டு செய்வார் என்று கூறியதும் நான் உங்கள் அருகில் இருக்கும்போது வேலையாளுக்கு என்ன தேவை உள்ளது? என்றார்.

மேலும் ரஷித் சாஹிப் கூறுகிறார்: மிகவும் பயனளிக்கக்கூடிய மனிதர். 9–10 பள்ளிக்கூடங்கள் உருவாக்கினார்கள். வருமானம் அதிகமில்லை. பள்ளிக்கூடத்திற்கு அதிகம் கொடுக்க முடியவில்லை என்றதும் ஒருமுறை தாமே கூலியாளர்களைச் சேர்த்து கூலி வேலை செய்தார். உங்களை விட நான் அதிகம் வேலை செய்கிறேன் என்று கூலி ஆள்களிடம் கூறுவார். நான் நவாபின் மகனாவேன். இப்பகுதியின் பெரிய பொறுப்பில் உள்ளவன் என்ற எண்ணம் எல்லாம் இல்லை.

இவரது மகள் மஹ்மூதா சுல்தானா எழுதுகிறார்: எனது தந்தையாருக்கு கிலாஃபத்துடன் பெரும் அன்பிருந்தது. அன்பு பற்று மறைவான ஒன்றல்ல. உட்காரும்போது எழும்போதும் தந்தையிடம் பெற்ற பாடம் என்னவென்றால் எப்போதும் அல்லாஹ்விடம் தவக்குல் வைக்க வேண்டும். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் துஆ செய்ய வேண்டும். துஆ இல்லை என்றால் ஒன்றுமில்லை என்பதாகும். இறைவன் மீது அளவு கடந்த பொறுப்பு சாட்டுதல் உள்ளவர். மிகவும் துணிச்சலும் வீரமும் மிக்கவர். அல்லாஹ்வைத் வேறு எவருக்கும் பயப்பட மாட்டார். படைப்பின சேவையில் முன் நிற்பார்.

அதுபோன்று இவரது மகன் சுல்தான் முஹம்மது கான் கூறுகிறார்: எனது தந்தை நிறைய சமூக சேவை செய்துள்ளார். 8 பள்ளிக்கூடங்களைக் கட்டினார். கபருஸ்தானுக்கு இடம் வழங்கினார். 8 பள்ளிக்கூடங்களுக்கு இடம் கொடுத்தார். நிறைய ஏழைகளுக்கு வேலை ஏற்பாடு செய்து கொடுத்தார். அவர்களுக்கு பயன்பட்டார்.

அல்லாஹ் அவருடன் ரஹ்மத் மற்றும் மன்னிப்பு நடைமுறையைக் காட்டுவானாக. இவரது பிள்ளைகளையும் இவரது நன்மைகளில் நிலைத்திருக்கச் செய்வானாக. கிலாஃபத் மற்றும் ஜமாஅத்துடன் தொடர்பில் வைப்பானாக. நான் கூறியது போன்று ஜனாஸாவை ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நடத்துவேன்.

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி…)*

**விருந்தினர்களின் நற்தாக்கங்கள்**

இதற்குப் பிறகு சிரியாவிலிருந்து வருகை தந்திருந்த டாக்டர் உஸாமா அப்துல் அலீம் சாஹிப் அரபி மொழியில் தமது நற்தாக்கங்களை வெளிப்படுத்தினார்கள். இதன் உருது மொழியாக்கத்தை யூ.கே வைச் சேர்ந்த மதிப்பிற்குரிய தாஹிர் நதீம் சாஹிப் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

உஸாமா அப்துல் அலீம் அவர்கள் கூறினார்கள்: வாழ்க்கையில் முதல் முறையாக காதியான் வருவதற்கான நற்பாக்கியம் கிடைத்துள்ளது. காதியான் வருவது என்பது எனக்குச் சாத்தியமற்ற ஒரு விஷயமாகும். ஏனென்றால் நான் ஒரு நீண்ட காலமாக ஜமாஅத்தைக் கடுமையாக எதிர்ப்பவர்களில் ஒருவனாக இருந்தேன். இந்த எதிர்ப்பின் காரணமாக ஜமாஅத்திற்கு எதிராக எங்கள் நாட்டில் பொய்யான பிரச்சாரம் செய்யப்பட்டு வந்தது. இதன் காரணமாக என்னைப் போன்ற இளைஞர்களின் சிந்தனைகளில் இந்த ஜமாஅத் இஸ்லாத்திற்கு எதிரான ஒரு புதிய மார்க்கமாகும்; மேலும் இவர்கள் இறுதி நபித்துவத்தை மறுக்கக் கூடியவர்கள் என்றே கருதி வந்தோம்.

எவ்வாறு பொய் நீண்ட காலம் நிலைத்திருக்க முடியாதோ அவ்வாறே என்னுடன் நடைபெற்றது. பிறகு அல்லாஹ்வின் நியதிக்கேற்ப எனக்கு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் நூல்களைப் படிப்பதற்பான நற்பாக்கியம் கிடைத்தது. நான் அன்னாரது நூல்களை உண்மை எனவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்னார் அளவற்ற அன்பு கொண்டிருப்பதையும் கண்டேன். அன்னாரது வார்த்தைகளில் காணப்படுகின்ற உண்மை மற்றும் ஒளிக்கு முன்னால் பொய் என்ற அனைத்துச் சிலைகளும் உடைந்து விட்டன.

இதற்குப் பிறகு நான் முடிவெடுப்பதற்கு முன்பாக இறைவன் முன்னிலையில் குனிந்தேன். 2014 ஆம் ஆண்டு ரமலான் மாதத்தில் ஒரு நாள் இரவில் எழுந்து மிகவும் உருக்கத்துடன் இவ்வாறு செய்தேன். இறைவா! முழுச் சமுதாயமும் எதிர்பார்த்துக் கொண்டிக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மிர்ஸா குலாம் அஹ்மது அவர்கள் தானா என்று நீ எனக்குத் தெரிவிப்பாயாக.

இறைவனது அருள் இறங்கியது. அவன் தரப்பிலிருந்து எனக்கு விரைவாகவே பதில் கிடைத்து விட்டது. நான் தூக்கத்திற்கும் விழிப்புக்கும் இடைப்பட்ட நிலையில் இருக்கின்றபோது ஓர் உரத்த கம்பீரமான குரலில், நான் அவரை என் தரப்பிலிருந்து உண்மையின் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றவராக நியமித்துள்ளேன் என்ற கேட்டது. இந்த ஓசை எனது உடலின் ஒவ்வொரு அங்கத்தையும் உலுக்கி விட்டது.

நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். எவ்வாறு நான் சூரியனைக் கண்ட பிறகு அதன் ஒளியைக் குறித்து சந்தேகம் கொள்ள மாட்டேனோ அவ்வாறே ஒரு நொடி கூட இந்த வார்த்தைகளைக் கேட்ட பிறகு அவரது உண்மை தொடர்பாக எவ்வித சந்தேகமும் என்னால் கொள்ள முடியாது.

எனவே இதற்குப் பிறகு இறைவன் எனக்கு இந்த அழைப்பாளரின் குரலை செவியேற்பதற்கான நற்பாக்கியத்தை வழங்கினான். பிறகு நான் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம் பைஅத் செய்தேன். பிறகு அல்லாஹ் அருள் செய்தான். இப்போது எனக்கு எந்த அருளுக்குரிய பூமியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய பாதங்கள் பட்டனவோ அதை தரிசிக்கக்கூடிய நற்பாக்கியத்தையும் வழங்கி விட்டான்.

மேலும் நான் இதனையும் கூற விரும்புகின்றேன். அதாவது நான் இந்த நகரத்தில் அதாவது காதியானில் இறைவனைப் பார்த்து விட்டேன். மேலும் நான் இஸ்லாம் தொடர்பான முன்னறிவிப்பை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டரின் கைகளில் முழுமையடைவதைப் பார்த்து விட்டேன். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய ஆன்மா இப்போதும் காதியானின் பூமியில் பரவியுள்ளத்தைப் போன்று உணர்கிறேன்.

மேலும் அன்னாரது அருளுக்குரிய காலடிகளின் ஓசை இப்போது வரை கேட்கின்றது. அன்னார் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்துக் கொண்டு இந்த தெருக்களில் சென்றார்கள். மஸ்ஜிது முபாரக், பைத்துத் துஆ மற்றும் பைத்துல் ஃபிக்ரில் நான் சஜ்தா செய்தபோது எனது கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் வெளிவந்தன. ஏனென்றால் இந்த இடங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அழுதழுது துஆ செய்து வந்தார்கள். மேலும் இஸ்லாத்தின் பாதுகாப்பிற்காகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்தைப் பாதுகாப்பதற்காகவும் அறப்போர் செய்தார்கள்.

நான் அன்னாரது அருளுக்குரிய மண்ணறைக்கு முன்னால் நின்றபோது பெருமானார் (ஸல்) அவர்களது சலாத்தை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எட்ட வைத்தேன். வாக்களிக்கப்பட்ட அந்த நபர் இந்த நகரத்தில் தோன்றி 125 வருடங்கள் கழிந்து விட்டன. அவர் நானே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும் இமாம் மஹ்தி என்றும் அறிவிப்புச் செய்தார். மேலும் நான் உமது தூதுச் செய்தியை பூமியில் எல்லை வரை எட்ட வைப்பேன் என்று இறைவன் என்னிடம் வாக்குறுதி அளித்துள்ளான் என்றும் கூறினார்கள். பிறகு உலகத்தின் கண்கள் பார்த்தன. சிறிது காலம்தான் கழிந்திருந்தது. அவரது முன்னறிவிப்புகள் நிறைவேறின. அறியப்படாமலிருந்த இந்த நகரம் உலகத்தில் பிரசித்திபெற்ற நகரமாகி விட்டது.

**மஹ்திக்கான வாதம் செய்த பலர் உலகத்தில் வந்துள்ளனர். அவர்கள் தமது பிரச்சாரத்தை உலகில் பரப்புவதற்கான முன்னறிவிப்புகளைச் செய்தனர். ஆனால் ஒருவரைத் தவிர வேறெவரது கூற்றும் நிறைவேறவில்லை. மேலும் அந்த நபர் பெஹஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். அவரது கல்லறையில் “ வாக்களிக்கப்பட்ட மஸீஹும் இமாம் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானியின் அருளுக்குரிய கல்லறை என்று எழுதப்பட்டுள்ளது”**

இன்று நான் காதியானிலிருந்து முழு உலகத்தையும் நோக்கிக் கேட்கின்றேன். அதாவது இத்தனை முன்னறிவிப்புகள் நிறைவேறிய பிறகும் இந்த நபரின் உண்மைத்துவம் தொடர்பாக ஏதாவது சந்தேகம் எஞ்சியுள்ளதா?

இறுதியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஓர் அரபிக் கவிதையை அன்னார் தமது சொற்பொழிவில் எடுத்துக் கூறினார்கள். அதன் பொருள் இதுவாகும்: இறைவா! நீயே எமது தலைவரின் சமுதாயத்தின் நிலைமைகளைச் சீர்திருத்துவாயாக. ஏனென்றால் இது உனக்கு மிகவும் எளிதான பணியாகும். மேலும் எங்களுக்கு இது மிகக் கடினமாகும்.

இதற்குப் பிறகு மாஸ்கோவிலிருந்து வந்திருந்த மதிப்பிற்குரிய வலீ இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். அதன் உருது மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய தாஹிர் அஹ்மது தாரிக் சாஹிப்

(நாயிப் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யா) அவர்கள் எடுத்துக் கூறினார்கள்:

அவர்கள் கூறினார்கள்: நான் ஒரு வரலாற்றாசிரியர் என்ற அடிப்படையில் நீண்ட காலமாக இஸ்லாத்தின் வரலாற்றையும், பிற மார்க்கங்களின் வரலாற்றையும் படித்து வருகின்றேன். பிறப்பால் நான் கிறித்தவனாவேன். ஆனால் எனது ஆராய்ச்சி என்னை 2002 ஆம் ஆண்டு இஸ்லாத்தின் பக்கம் கொண்டு வந்தது. மேலும் இஸ்லாம் பிற அனைத்து மார்க்கங்களிலுள்ள ஏகத்துவ போதனைகளையும், மனிதர்களின் நாகரீகத்தையும் தமக்குள்ளே கொண்டுள்ளது என்பது எனக்கு புரிய வந்தது.

மேலும் இந்த ஆய்வின் அடிப்படையில் எனது சிந்தனையில், அனைவரையும் விட அதிகமாக இதனை அஹ்மதிய்யா ஜமாஅத் தான் பரப்புகின்றது, நடைமுறைப்படுத்தி வருகின்றது என்று தோன்றியது. ஆனால் நான் அஹ்மதிய்யத் தொடர்பாக, இது ஒரு முஸ்லிம் அல்லாத அமைப்பாகும் என்ற தவறான விஷயத்தையே கேள்விப்பட்டுள்ளேன்.

ஆனால் வரலாற்றாசிரியர் என்ற அடிப்படையில் நான் மக்களின் பேச்சைக் கேட்பது மற்றும் புத்தகத்தைப் படிப்பது மட்டுமின்றி அதன் உண்மை நிலை வரை எட்டுவதும் அவசியமாக இருந்தது. எனவே நான் இதன் பக்கம் கவனம் செலுத்தினேன். இதன் விளைவாக எந்த மக்கள் அஹ்மதிய்யத் தொடர்பாக எதிர்மறையான விஷயத்தைக் கூறுகின்றனரோ அவை அனைத்தும் பொய் என்பது தெரிய வந்தது.

மேலும் அஹ்மதிகள் முஸ்லிம் அல்லாதவர்கள் என்று மற்றவர்கள் கூறுவதைப் பொறுத்தவரை, நான் அஹ்மதிகளின் பிரசுரத்தைப் படித்துள்ளேன். அஹ்மதி முஸ்லிம்களைச் சந்தித்தன் விளைவாக, அஹ்மதிய்யத்தான் உண்மை இஸ்லாம் என்றும், அஹ்மதிகள் மற்ற முஸ்லிம்களை விட உண்மையானவர்கள் மற்றும் சிறந்த முஸ்லிம்கள் என்ற முடிவிற்கு வந்தேன்.

ரஷ்யாவில் கூறப்படுகின்ற ஒரு பழமொழி என்னவென்றால், நூறு முறை கேட்பதை விட ஒரு முறை சுயமே பார்க்க வேண்டும் என்பதாகும்.

இங்கு காதியானில் அஹ்மதிகளின் ஆன்மீக வாழ்க்கை மற்றும் தூய சுற்றுச்சூழலைக் கண்டு, 20, 21 வது நூற்றாண்டில் அஹ்மதிய்யத்தான் ஓர் உயிருள்ள ஜமாஅத் என்பதையும், ஒரே நேரத்தில் முந்தைய நூற்றுக்கணக்கான வருடங்களாக இருந்த மரபுகளை தொடரச் செய்து வருகின்றது என்ற நம்பிக்கையையும் நான் எட்டினேன்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: மேலும் எத்தனை நூற்றாண்டுகள் கழியும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் காதியானிலிருந்து உரத்த குரலில் எழுப்பப்படுகின்ற அந்த முழக்கமே உலகத்தில் கேட்கும் என்பதை நான் நன்கறிவேன்.

இதற்குப் பிறகு கேம்பியாவின் முபல்லிக் மதிப்பிற்குரிய அப்துர் ரஹ்மான் சாம் சாஹிப் அவர்கள் ஆங்கில மொழியில் தமது நற்தாக்கங்களைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். அதன் உருது மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய முஹம்மது அஹ்ஸன் கவ்ரி சாஹிப் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

அப்துர் ரஹ்மான் சாம் சாஹிப் கூறினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்ஹாம்களில் ஓர் இல்ஹாம் என்னவென்றால், நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்பதாகும்.

இன்னொரு இல்ஹாம் என்னவென்றால், மக்கள் தொலை தூரத்திலிருந்து உம்மிடத்தில் வருவார்கள் என்பதாகும்.

நாம் இன்று இந்த இல்ஹாம்கள் வெளிப்படையாக உண்மை என்பதையும், அது முழுமை பெற்றிருப்பதையும் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தி இன்று உலகின் எல்லைகள் வரை எட்டி விட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் தொலை தூரத்திலிருந்து பயணம் செய்து காதியான் வருகின்றனர். அல்லாஹ்வின் அருளால் நான் மூன்றாவது முறையாக காதியான் வருவதற்கான நற்பேற்றைப் பெறுகிறேன்.

இரண்டு வருடத்திற்கு முன்பு நான் முதல் முறையாக ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டேன். அப்போதிருந்து இப்போது வரை ஆப்ரிக்காவிலிருந்து காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதை நான் பார்க்கின்றேன். அல்ஹம்துலில்லாஹ்.

ஆப்ரிக்காவிலிருந்து வந்திருக்கின்ற நாங்கள் ஆண்டு மாநாட்டின் ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். ஆயிரக்கணக்கான விருந்தினர்கள் இருந்த போதிலும் ஒவ்வொருவரும் வீட்டில் இருப்பதைப் போன்ற சுற்றுச் சூழலை ஏற்படுத்தித் தருவதற்கு முயற்சி செய்யப்படுகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விருந்தினர்களை உபசரிப்பதை தமது வீட்டிலிருந்து ஆரம்பித்தார்கள். அல்லாஹ்வின் அருளால் அது இப்போதும் காதியானில் நிலைபெற்றுள்ளது. மேலும் நாம் இதற்கான உயிருள்ள ஆதாரமாகத் திகழ்கின்றோம்.

வரக்கூடிய வருடமுடம், ஒவ்வொரு வருடமும் கூட்டம் கூட்டமாக மக்கள் காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் துஆ செய்கின்றோம். மேலும் நாங்கள் இந்த மாநாடு மற்றும் வரக்கூடிய ஆண்டுகளில் நடக்கக்கூடிய ஆண்டு மாநாட்டின் வெற்றிக்காக துஆ செய்கின்றோம்.

மேலும் நான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஆப்ரிக்காவிலிருந்து வந்திருக்கின்ற ஆண்கள் மற்றும் பெண்கள் சார்பாக, ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கும், இந்தியாவின் ஜமாஅத் மற்றும் காதியானிலுள்ளவர்கள், மற்றும் MTA வின் மூலமாக இந்த ஆண்டு மாநாட்டிலிருந்து பயன் பெற்றுக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். அல்லாஹ் நமது துஆக்களையும், இறைவணக்கங்களையும், தொண்டுகளையும் ஏற்றுக் கொள்வானாக. ஆமீன்.

இத்துடன் மூன்றாவது நாளின் முதல் அமர்வு நிறைவுற்றது.

**மூன்றாவது நாளின் இறுதி அமர்வு**

காதியான் ஆண்டு மாநாட்டின் நிறைவு அமர்வின் நிகழ்ச்சிகள் மதிப்பிற்குரிய இனாம் கவ்ரி சாஹிப் (நாஸிர் ஆலா, அமீர் மகாமி காதியான்) அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. மதிப்பிற்குரிய ஹாஃபிஸ் முஹம்மது ஃபாரூக் அஃஸம் சாஹிப் அவர்கள் சூரா ஹுஜ்ராத்தின் 11 முதல் 13 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள். அதன் உருது மொழியாக்கத்தை ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானின் துணை பிரின்ஸ்பலான மதிப்பிற்குரிய கமருல் ஹக் சாஹிப் அவர்கள் படித்துக் காட்டினார்கள். அதற்குப் பிறகு மதிப்பிற்குரிய அப்துல் வாசிஃ சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கவிதை வரிகளைப் பாடினார்கள்.

அதற்குப் பிறகு மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது இனாம் கோரி சாஹிப் (நாஸிர் அஃலா சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, காதியான் அவர்கள்) ஆட்சியில் இருக்கின்ற முக்கிய பிரமுகர்கள் பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் ஜமாஅத் அன்பர்கள்

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 09 May 2019 Issue No. 19

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்கள். அவர்கள் மாநாட்டை நடத்துவதற்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கியவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். எல்லாவற்றிற்கும் முதலாவதாக அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவித்தார்கள். அவனது அருளாலும் கருணையாலும் மாநாடு எல்லா வகையிலும் சிறப்பான முறையில் அதன் நிறைவை எட்டியிருக்கின்றது. இவ்வாறே அவர்கள் ஹுஸூர் அய்யத்தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்கள். அதாவது, ஹுஸூர் அவர்களின் வழிகாட்டலும் பரிவும் எப்போதும் நம்முடன் தொடர்ச்சியாக இருந்து வந்தது.

அதற்குப் பிறகு அவர்கள் பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளுக்கும் அவற்றின் அதிகாரிகளுக்கும் மாநாட்டிற்காக அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பிற்கும் நன்றி தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு அமர்வின் தலைவர் அவர்கள் உள்ளூர் அளவில் நிறைவு துஆ செய்து வைத்தார்கள். இதற்கு பிறகு மேடையிலும் மாநாட்டுத் திடலிலும் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் M.T.A மூலமாக ஒளிபரப்பப்படுகின்ற தங்களது அன்பு இமாம் அவர்கள் காதியான் ஆண்டு மாநாட்டிற்காக நேரலையில் நிகழ்த்த இருக்கின்ற சொற்பொழிவைக் கேட்பதற்காகத் தத்தமது இடங்களில் அமர்ந்திருந்தனர்.

ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தியபோது முழு மாநாட்டுத் திடலும் நிரம்பி காணப்பட்டது. இலண்டனிலிருந்து மாநாட்டின் நேரடி ஒளிபரப்புகள் ஆரம்பமாவதற்கு முன்னதாக முஸ்லிம் தொலைகாட்சி அஹ்மதிய்யா இன்டர்நேஷனலிலிருந்து காதியான் மற்றும் அதன் புனித இடங்கள் பற்றி விளக்குகின்ற குறும்படம் ஏறக்குறைய 35 நிமிடங்கள் காட்டப்பட்டது. அதில் தாருல் மஸீஹ், மஸ்ஜிது முபாரக், மஸ்ஜிது அக்ஸா மற்றும் மினாரத்துல் மஸீஹ் ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த அழகான காட்சி காட்டப்பட்டது.

மேலும், இந்த இடங்களின் முக்கியத்துவம் மற்றும் அருள்கள் தொடர்பாக மிகவும் சிறந்த முறையில் எடுத்துக் கூறப்பட்டதுடன் பெஹஸ்தி மக்பரா மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கல்லறை மற்றும் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமான கிலாஃபத் தோன்றிய இடம் ஆகியவற்றின் மிகவும் அழகான காட்சிகள் காட்டப்பட்டன. அத்துடன் அவற்றைப் பற்றிய அறிமுகமும் சிறந்த முறையில் விளக்கமாகக் கூறப்பட்டது. குறும்படத்தின் இறுதியில் மாநாட்டின் அனைத்து நிகழ்ச்சிகளின் சுருக்கமான காட்சிகள் காட்டப்பட்டன. மேலும், காதியானில் ஆண்டு மாநாட்டின் நாட்கள் எவ்வாறிருந்தன என்பதும் அழகிய முறையில் காட்டப்பட்டது.

இதற்கு பிறகு M.T.A –வில் நேரலை நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. ஹுஸூர் அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் வந்து அமர்ந்தார்கள். இலண்டனிலும் ஐந்தாயிரத்திற்கும் அதிகமான எண்ணிக்கையில் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவைக் கேட்பதற்காக காத்துக் கொண்டிருந்தனர். மதிப்பிற்குரிய ஃபிரோஸ் ஆலிம் சாஹிப் அவர்கள் சூரா அல் அஹ்ஸாபின் 41 முதல் 49 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள். பிறகு அதன் உருது மொழியாக்கத்தையும் படித்துக் காட்டினார்கள். அதற்கு பிறகு மதிப்பிற்குரிய ஸய்யிது ஆஸிக் ஹுஸைன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஃபார்ஸி மொழி கவிதையைப் பாடி அதன் உருது மொழியாக்கத்தையும் எடுத்துக் கூறினார்கள்.

அதற்கு பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உருது கவிதையை மதிப்பிற்குரிய உமர் ஷரீஃப் சாஹிப் அவர்கள் அழகிய குரலில் பாடினார்கள்.

அதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக எழுந்து நின்றதுமே காதியான் மாநாட்டுத் திடலிலிருந்து எழுப்பப்பட்ட நாரே தக்பீர்; அல்லாஹு அக்பர் என்ற முழக்கங்கள் விண்ணைத் தொட்டன.

தஸஹ்ஹுது தஅவ்வூது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இன்று காதியான் ஆண்டு மாநாட்டின் இறுதி நாளின் இறுதி அமர்வாகும். இந்த நேரத்தில் பல்வேறு நாடுகளிலிருந்து வருகை தந்துள்ள 19000–க்கும் அதிகமான அஹ்மதிகள் காலத்தின் இமாம் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் இந்த நகரத்தில் ஒன்று கூடியுள்ளனர். அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு மற்றும் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப பெருமானார் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தை புதுப்பிப்பதற்காக வந்தார்கள்.

அன்னார் எங்கு இஸ்லாத்தின் அழகிய போதனைகள் மூலமாக அடியார்களை இறைவனுக்கு அருகே கொண்டு வருவதற்கான வழியைக் காட்டினார்களோ மேலும் திருக்குர்ஆனின் உண்மையான அழகிய போதனையை உலகிற்கு வெளிப்படுத்திக் காட்டினார்களோ அங்கு பெருமானார் (ஸல்) அவர்களின் கண்ணியம் மற்றும் மகத்துவமிக்க அந்தஸ்து தொடர்பாகவும் உலகிற்கு எடுத்துக் கூறி உண்மையை விரும்பக்கூடிய மற்றும் அந்நியர்கள் இஸ்லாத்தின் மீது தொடுக்கின்ற தாக்குதலினால் நிம்மதியிழந்து காணப்பட்ட முஸ்லிம்களின் ஈமானை மட்டும் உறுதிப்படுத்தவில்லை. மாறாக, இஸ்லாம் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக ஆட்சேபிக்கின்ற ஒவ்வொரு எதிரியின் வாயையும் அடைத்தார்கள்.

மேலும் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு அன்னாரது ஆதாரங்களுக்கு முன்னிலையில் ஒன்றும் செய்ய இயலாமல் போயிற்று. மேலும் அன்னார் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பின் அந்தஸ்தை எவரும் சென்றடையவில்லை. மேலும் எவராலும் சென்றடைய முடியாது.

*(தொடரும் – இன்ஷா அல்லாஹ்...)*

***நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்***
தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)
***தொலைபேசி எண்: 1800 425 40000***
இந்த **TOLL FREE** எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad